பிரஸார் பாரதி

இந்திய வானொலி, சென்னை

18 07 2025 **FRIDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஏழை-எளிய மக்களின் மேம்பாட்டிற்கான திட்டங்களை மத்திய அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில், கோவை, திருப்பூர் மாவட்டங்களில் உள்ள தொழில் நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.
3. தமிழக காவல்துறையினர் சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டுவதில் மிகுந்த அக்கறையோடு செயல்பட வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.
4. கோவை, நீலகிரி மாவட்ட மலைப்பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் மிக கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
5. ஆசிய இளையோர் பேட்மிண்டன் போட்டியின் முதல் சுற்று ஆட்டங்களில் இந்தியா வெற்றிபெற்றுள்ளது.

இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>

ஏழை எளிய மக்களின் மேம்பாட்டிற்கான திட்டங்களை மத்திய அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பீகார் மாநிலம் மோத்தி ஹாரியில், 7 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைத்து பேசிய பிரதமர், இதன் ஒருபகுதியாகத்தான் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க வகை செய்யும் புதிய திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதாக தெரிவித்தார்.

இந்த திட்டத்தின்கீழ், வேளாண் சாகுபடி குறைவாக உள்ள 100 மாவட்டங்கள் தெரிவு செய்யப்படும் என்றும், இதன்மூலம் ஒரு கோடியே 75 லட்சம் விவசாயிகள் நேரடியாக பயனடைவார்கள் என்றும் பிரதமர் கூறினார்.

தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு அரசியல் சாசன அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதையும் அவர் குறிப்பிட்டார்.

பிரதமரின் ஜன் மண் திட்டத்தின்கீழ், பழங்குடியின மக்கள் பயன்பெறும் வகையில், 25 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் கிழக்கு மற்றும் மேற்கு மாநிலங்களின் வளர்ச்சிக்காக திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு நரேந்திர மோடி கூறினார்.

<<<<<<>>>>>

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு கோவை, திருப்பூர் மாவட்டங்களில் செயல்பட்டுவரும் தொழில் நிறுவனங்கள் முக்கிய பங்களிப்பதாக மத்திய அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

திருப்பூரில் இன்று பின்னலாடை நிறுவனங்களின் செயல்பாடுகளை கேட்டறிந்த அமைச்சர், தொழில்துறையினருடனும் ஆலோசனை நடத்தினார்.

இப்பகுதியில் செயல்பட்டுவரும் நூற்பாலைகள் மற்றும் பின்னலாடைகள் நிறுவனங்களை பார்வையிட்டு, இங்குள்ள அனுபவத்தை ஒடிஷாவிலும் செயல்படுத்த உள்ளதாக அவர் கூறினார்.

இங்குள்ள பின்னலாடை நிறுவனங்களில் பணியாற்றிவரும் பீகார் மாநிலத்தை சேர்ந்த தொழிலாளர்களுக்கு தங்களது சொந்த மாநிலத்திலேயே வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தமிழக காவல்துறையினர் மக்களுக்கு துணையாகவும், சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டுவதில் மிகுந்த அக்கறையோடும் செயல்பட வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழ்நாடு காவல் உயர் பயிற்சியகத்தில் நடைபெற்ற காவல் துணை கண்காணிப்பாளர்களின் பயிற்சி நிறைவு அணிவகுப்பு விழாவில் காணொலி வாயிலாக உரையாற்றிய முதலமைச்சர், இந்த பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்த ஒன்பது பெண் அதிகாரிகள் உட்பட 24 காவல் துணை கண்காணிப்பாளர்களும் சிறப்பாக செயல்பட வேண்டும் என்று கூறினார்.

மக்கள் பிரச்சினைகளுக்கு நேரடியாக தீர்வுகாணும் உன்னதமான பணியை சிறப்பாக செய்ய வேண்டும் என்றும், மக்களின் குறைகளை பொறுமையாக கேட்டறிந்து, அவர்களுக்கு நேர்மையான சேவையை விரைந்து வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

மாறிவரும் சூழலுக்கு ஏற்ப, உயர் தொழில்நுட்பங்களை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த வேண்டும் என்றும் காவல்துறை அதிகாரிகளை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

மாணவர்கள் வருங்காலத்தில் தலைசிறந்து விளங்கும் வகையில், ஆசிரியர்கள் அவர்களுக்கு பயிற்றுவிக்க வேண்டும் என்று பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி வலியுறுத்தியுள்ளார்.

கள்ளக்குறிச்சியில் தலைமையாசிரியர்களுக்கான அடைவுத்தேர்வு ஆய்வுக்கூட்டத்தில் பேசிய அவர், ஆசிரியர் பணி என்பது மாணவர்கள் மட்டுமின்றி, அவர்களது குடும்பத்தினரும் பல தலைமுறைகளுக்கு நினைத்து பார்க்கக்கூடிய அறப்பணி என்றார்.

மாணவர்கள் தமிழில் புரிந்துகொள்ளும் திறனை ஆசிரியர்கள் வளர்க்க வேண்டும் என்றும் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடரில் தமிழகத்திற்கான நிதி ஒதுக்கீடு, கல்வியை மாநிலப்பட்டியலுக்கு கொண்டுவருவது உள்ளிட்ட பிரச்சினைகளை எழுப்ப திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சென்னையில் இன்று அக்கட்சித் தலைவர் திரு மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

<<<<<<>>>>>

திமுக அரசின் மின்கட்டண உயர்வு காரணமாக, தமிழகத்தில் உள்ள தொழில் நிறுவனங்கள் நலிவடைந்து வருவதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

திருப்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மயிலாடுதுறை மதுவிலக்கு காவல்துறை டிஎஸ்பி திரு சுந்தரேசனின் வாகனம் பறிக்கப்பட்டது மற்றும் அவர் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தவறான குற்றச்சாட்டுகளின்பேரில் நேர்மையான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்றும் திரு நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

தமிழகத்தின் கோவை, நீலகிரி மாவட்டங்களுக்கு உட்பட்ட மலைப்பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் மிக கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

<<<<<<>>>>>

மக்களுக்கு தரமான மருந்துகள் குறைந்த விலையில் கிடைக்கும் வகையில் மத்திய அரசு மக்கள் மருந்தகத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

நாமக்கல்லில் இயங்கிவரும் மக்கள் மருந்தகங்களில் மருந்துப்பொருட்கள் சந்தை விலையைவிட நான்கு மடங்கு குறைவாக கிடைப்பதாக பயனாளி ஒருவர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

<u>மாவட்டச் செய்திகள்</u>

அரியலூர் மாவட்டம் செந்துறை ஒன்றியத்துக்கு உட்பட்ட ஊராட்சிகளில் சுமார் 8 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப்பணிகளை போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் இன்று தொடங்கிவைத்தார்.

-----------------------

இந்திய புள்ளியியல் துறை மற்றும் திட்ட அமலாக்கத்துறையின் 75-ஆவது ஆண்டு நிறைவையொட்டி, தருமபுரி துணை மண்டல அலுவலகம் சார்பில், இலக்கியம்பட்டி அரசுப்பள்ளியில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

---------------

விழுப்புரம் மாவட்டத்தில் போதைப்பொருள் மற்றும் இணையதள குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வு கண்காட்சியை ஆட்சியர் திரு ஷேக் அப்துல் ரகுமான் இன்று தொடங்கிவைத்தார்.

--------------

காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு சுமார் 7 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான வேளாண் பயிர்க்கடன் மற்றும் இடுபொருட்களை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் வழங்கினார்.

--------------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்பை தடுக்கும் நோக்கில் ஏற்படுத்தப்பட்டுள்ள சாலை பாதுகாப்பு சங்கத்தை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.

----------------

பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் பள்ளி கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி வரும் 22, 23-ஆம் தேதிகளில் நடைபெறும் என்று மாவட்ட ஆட்சியர் திரு அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

-------------------

நாமக்கல்லை அடுத்த வள்ளிபுரம் பகுதியில் சரக்கு லாரி சாலை தடுப்பில் மோதி நேரிட்ட விபத்தில் இருசக்கர வாகனத்தில் சென்ற இளம்பெண் உயிரிழந்தார்.

-------------------

ஸ்ரீரங்கம் அருள்மிகு ரங்கநாதர் கோயில் ஜேஷ்டாபிஷேகத்தை முன்னிட்டு, திருமஞ்சனம் இன்று நடைபெற்றது.

----------------

மகளிர் சுயஉதவிக்குழுவினர் தயாரிக்கும் பொருட்களின் இயற்கை சந்தை சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நாளையும், நாளை மறுநாளும் நடைபெறும் என்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

ஆசிய இளையோர் பேட்மிண்டன் போட்டியின் முதல் சுற்று ஆட்டங்களில் இந்தியா வெற்றிபெற்றுள்ளது.

இந்தோனேஷியாவில் இன்று தொடங்கிய இப்போட்டியின் குழு பிரிவுகளில் இந்தியா 110-69 என்ற புள்ளிக்கணக்கில் இலங்கையை வென்றது.

---------------

பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான உலக விளையாட்டுப்போட்டிகளின் நீச்சல் பிரிவில் இந்தியாவின் ஸ்ரீஹரி நட்ராஜ் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஜெர்மனியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 200 மீட்டர் ஃபிரி ஸ்டைல் பிரிவில் முதலிடம் பிடித்ததன் மூலம் அவர் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

----------

ஸ்விஸ் ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் அர்ஜுன் கதே – விஜய் சுந்தர் பிரசாந்த் இணை, ஜெர்மனியின் **Jebens –** பிரான்சின் **'Albano Olivetti** இணை இடையேயான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

**<<<<<<END>>>>>**